முதன்மை அமர்வு நீதிமன்றம், கடலூர் மாவட்டம், கடலூர்.

அமர்வு வழக்கு எண் : 256/2019

அரசுதரப்பு 1-வது சாட்சியின் வாக்குமூலம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ஆறுமுகம் | வயது | : | 47 |
| தந்தை/கணவர் பெயர் | : | அய்யாகண்ணு | தொழில் | : | |
| கிராமம் | : | | ஜாதி | : | |
| தாலூக்கா | : | | சமயம் | : | |
| மாவட்டம் | : | | | : | |

இந்திய உறுதிமொழிச்சட்டம் (44/1969)-ன் விதிமுறைகளின் படி 14.03.2022-ம் நாளாகிய இன்று மேற்படி சாட்சிக்கு முதன்மை மாவட்ட நீதிபதியால் சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

முதல் விசாரணை - நான் தற்போது தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகத்தில் பண்ருட்டி பெரியார் டெப்போவில் ஓட்டுநராக பணிபுரிந்து வருகிறேன். 11.12.2018 அன்று நான் அணைக்கரையிலிருந்து பண்ருட்டிக்கு நோக்கி வந்து கொண்டிருக்கும்போது கொள்ளுகாரன்குட்டை ஹாலோபிளாக் கம்பெனி அருகில் மாலை 4.30 மணியளவில் டுவீலரில் அடையாளம் தெரியாத 3 நபர்கள் வந்தார்கள். அதில் பின்னால் உட்கார்ந்திருந்தவர் கல், சின்ன இரும்பு குண்டு ஆகியவற்றால் கண்ணாடியில் அடித்தார்கள்.. கண்ணாடி வெடித்து விட்டது. பஸ்ஸை தடுமாறி நிறுத்தினேன். 10 நிமிடம் கண்ணை திறக்கமுடியவில்லை. நிறுத்தி விட்டு பார்த்தபோது அடித்தவர்கள் போய்விட்டார்கள். முத்தாண்டிகுப்பம் காவல்நிலையம் சென்று கேஸ் கொடுத்தேன். நானும், நடத்துனர் மணிகண்டனும் சென்று புகார் கொடுத்தோம். போலிசார் வந்து இடத்தை பார்வையிட்டார்கள். நான் மருத்துவமனைக்கு போய் சிகிச்சை எடுத்து கொண்டேன்.

16.12.2018 அன்று எதிரிகளை பிடித்திருக்கிறோம் என்று காடாம்புலியூர் காவல்நிலையத்தில் சொன்னார்கள். ஆஜர் எதிரிகளில் 2 பேர் காவல்நிலையத்தில் இருந்தார்கள். சிவசங்கர், சத்யராஜ் இருவரையும் அங்கு பார்த்தேன். அன்றே போலிசார் என்னை விசாரித்தார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் காவல்நிலையத்தில் நான் கொடுத்ததுதான். அந்த புகார் அசாஆ.1 ஆகும். சேதமதிப்பு ரூ.8000/- இருக்கும் என்று டெப்போவில் சொன்னார்கள். அது சம்மந்தமாக டெப்போவில் பதிவு செய்து கொண்டார்கள்.

எதிரிகள்தரப்பில் குறுக்கு விசாரணை - புகாரில் அடையாளம் தெரியாத 3 நபர்கள் என்று புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். கண்ணாடி வெடித்தவுடன் 10 நிமிடம் கண் தெரியவில்லை. வண்டி அலைமோதி 10 மீட்டர் தூரத்தில் நிறுத்தினேன். காவல்நிலையத்திற்கு மாலை 7.00 மணிக்கு சென்றோம். 5.45 மணிக்கு சம்பவ இடத்தில் போலிசார் என்னை விசாரித்தார்கள். ஸ்பாட்டிலேயே எழுதி கொண்டார்கள். 12 ஆம் தேதி விசாரித்தார்கள். அதன்பிறகு போலிசார் என்னை 16 ஆம் தேதி விசாரித்தார்கள். வண்டி சேதமதிப்பு குறித்து கார்ப்பரேஷனில்தான் முடிவு செய்யவேண்டும். எவ்வளவு சேதம் என்று நான் சொல்லமுடியாது. மருத்துவமனை சென்ற தேதி தெரியவில்லை. கண்ணாடி வெடித்ததிலிருந்து கண் உறுத்தி கொண்டிருக்கிறது. நான் அணைக்கரையிலிருந்து பண்ருட்டி வருவதற்கு அங்கே 3.20 க்கு வண்டியை எடுத்தேன். அணைக்கரையிலிருந்து பண்ருட்டி வருவதற்கு எங்களுக்கு டைமிங் உள்ளது. எங்கள் பஸ் எப்போதும் கூட்டம் அதிகமாகத்தான் இருக்கும். எந்த டைம் வருமோ அந்த டைமிற்கு வருவோம். நான் 50 கிமீ ஸ்பீடில் வந்தேன். பொறுமையாகத்தான் வரவேண்டும் என்று டெப்போவில் கிராமத்து மக்கள் புகார் செய்வார்கள் என்றால் சரிதான். அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் நாங்கள் வந்ததால் ஊர்மக்கள் கண்ணாடியை உடைத்து விட்டார்கள் என்றால் சரியல்ல. போலிசார் சொல்லி கொடுத்து எதிரியை அடையாளம் காட்டினேன் என்றால் சரியல்ல.

எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை - இல்லை

முதன்மை அமர்வு நீதிமன்றம், கடலூர் மாவட்டம், கடலூர்.

அமர்வு வழக்கு எண் :256/2019

அரசுதரப்பு 2 -வது சாட்சியின் வாக்குமூலம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | மணிகண்டன் | வயது | : | 41 |
| தந்தை/கணவர் பெயர் | : | கிருஷ்ணமூர்த்தி | தொழில் | : | |
| கிராமம் | : | | ஜாதி | : | |
| தாலூக்கா | : | | சமயம் | : | |
| மாவட்டம் | : | | | : | |

இந்திய உறுதிமொழிச்சட்டம் (44/1969)-ன் விதிமுறைகளின் படி 14.03.2022-ம் நாளாகிய இன்று மேற்படி சாட்சிக்கு முதன்மை மாவட்ட நீதிபதியால் சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

முதல் விசாரணை - நான் தற்போது பண்ருட்டி அரசு பணிமனையில் நடத்துனராக பணியில் உள்ளேன். 11.12.2018 அன்று அணைக்கரையிலிருந்து ஓட்டுநர் ஆறுமுகம் வண்டியை எடுத்தார். நான் நடத்துனராக இருந்தேன். கொள்ளுகாரன் குட்டை ஹாலோபிளாக் கம்பெனி அருகே 3 பேர் டுவீலரில் வந்தார்கள். நான் இன்வாய்ஸ் எழுதி கொண்டிருந்தபோது அடித்தமாதிரி இருந்தது. பஸ்ஸின் முன்பக்க கண்ணாடி வெடித்து விட்டது. கண்ணாடியை உடைத்துவிட்டு உள்ளே கல் கிடந்தது. என் கையில் காயம் ஏற்பட்டது. உடனே போலிசாருக்கு தகவல் கொடுத்ததின் அடிப்படையில் போலிசார் அங்கு வந்தார்கள். முத்தாண்டிகுப்பம் காவல்நிலையத்தில் ஓட்டுநர் ஆறுமுகம் புகார் கொடுத்தார். முன்கண்ணாடியின் சேதமதிப்பு ரூ.8000/- என்று கணக்கு போடுவார்கள். 16.1 2.2018 அன்று போலிசார் என்னை விசாரித்தார்கள். ஆஜர் எதிரிகளில் குள்ளமாய் உள்ள 2 பேர் காவல்நிலையத்தில் இருந்தார்கள். அடித்தது இவர்கள்தான் என்று இருவரையும்

காட்டினேன். இவர்கள்தான் என்று நான் ஒத்து கொண்டேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரிகள்தரப்பில் குறுக்கு விசாரணை - எனக்கு அணைக்கரையிலிருந்து பண்ருட்டி வரும்வரை டியூட்டி. காலை 6.00 மணிக்கு எடுத்தால் இரவு 10.00 மணிவரை இருக்கும். எங்களுக்கு ஒருநாள் விட்டு ஒருநாள்தான் டியூட்டி இருக்கும். 16 ஆம் தேதி எனக்கு ட்யூட்டியா என்று ஞாபகமில்லை. பஸ்ஸில் பொதுவாக கூட்டம் இருக்கும். அன்றைக்கு 10 பயணிகள், 12 போலிசார் பஸ்ஸில் பயணித்தார்கள். மொத்தமாக பஸ்ஸில் 25 பேர் இருந்திருப்பார்கள். போலிசார் சம்பவ இடத்திற்கு கால்மணிநேரத்தில் வந்து விட்டார்கள். பஸ்ஸில் இருந்த போலிசார் போய்விட்டார்கள். பயணிகளை விசாரிக்கவில்லை. போலிசார் எங்கள் இருவரையும் விசாரித்து எழுதி கொண்டார்கள். அதன்பிறகு விசாரித்து எழுதி கொள்ளவில்லை. போலிசார் சொல்லிக்கொடுத்து எதிரிகளை அடையாளம் காட்டினேன் என்றாலும், நான் அன்று ட்யூட்டியில் இருந்தேன் என்றாலும், காவல்நிலையத்திற்கு செல்லவில்லை என்றால் சரியல்ல. பொறுமையாகத்தான் வரவேண்டும் என்று டெப்போவில் கிராமத்து மக்கள் புகார் செய்வார்கள் என்றால் சரிதான். அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் நாங்கள் வந்ததால் ஊர்மக்கள் கண்ணாடியை உடைத்து விட்டார்கள் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை - இல்லை

<u>முதன்மை அமர்வு நீதிமன்றம், கடலூர் மாவட்டம், கடலூர்.</u>

அமர்வு வழக்கு எண் : 256/2019

அரசுதரப்பு 3-வது சாட்சியின் வாக்குமூலம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பன்னீர்செல்வம் | வயது | : | 56 |
| தந்தை/கணவர்<br><br>பெயர் | : | வடிவேல் | தொழில் | : | |
| கிராமம் | : | | ஜாதி | : | |
| தாலூக்கா | : | | சமயம் | : | |
| மாவட்டம் | : | | | : | |

இந்திய உறுதிமொழிச்சட்டம் (44/1969)-ன் விதிமுறைகளின் படி 14.03.2022-ம் நாளாகிய இன்று மேற்படி சாட்சிக்கு முதன்மை மாவட்ட நீதிபதியால் சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

முதல் விசாரணை - நான் தற்போது வீராணம் பம்ப் ஆபரேட்டராக பாவைகுளம் என்ற ஏரியாவில் உள்ளேன். 11.12.2018 அன்று சுமார் 4.30 மணிக்கு ட்யூட்டியில் இருக்கும்போது கண்ணாடி உடைந்து பஸ் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. கண்ணாடியை உடைத்து விட்டு போய்விட்டதாக சொன்னார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரிகள்தரப்பில் குறுக்கு விசாரணை - இல்லை.